**RECORD OF DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**UTHANGARAI**

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 22.08.2022 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case | : | O.S.No. 39 /2013 | Witness for | : | Plaintiff |
| Name | : | சிவஞானம் | Calling | : | PW2 |
| Father's Name | : | சின்னபையன் (எ) செங்கோட கவுண்டர் | Age | : | 48 |
| Village | : | மாரம்பட்டி | Taluk | : | ஊத்தங்கரை |
| District | : | கிருஷ்ணகிரி | | | |

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை தாக்கல் செய்தது எனது தயார் . நான் +2 வரை படித்துள்ளேன்,. அதியமான் பள்ளியில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் மாரம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . எனக்கு என் தந்தை வைத்திருந்த புர்வீக சொத்து இருக்கிறது. நான் என் தந்தை சம்பாதித்த சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை நான் வாங்கிய சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன் எனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் இருக்கின்றன,. எனது தாயார் என்னுடன் தான் ஒன்றாக குடியிருந்து வருகிறார் . எனது தாயார் மாடு வைத்து இருக்கிறார்களா என்றால் அவருக்கு வயதாகிவிட்டது அவர் வீட்டில்தான் வசிக்கிறார் . எனது தாயாரின் ஏரிவேலை அட்டை இருந்து ரத்தாகிவிட்டது . தற்போது எனது தாயார் ஏரிவேலைக்கு செல்லவில்லை. ஏரிவேலை அட்டை நாங்கள் ரினிவல் செய்யவில்லை . எனது தாயார் இன்றும் ஏரிவேலைக்கு சென்றுகொண்டிருக்கிறார் என்றால் எனக்கு தெரிந்து இல்லை, ஏனென்றால் நான் காலை 8 மணியளவில் வேலைக்கு சென்று இரவு தான் திரும்புகிறேன். எனது தாயார் இந்த வழக்குரையை 3 முறைகள் எதற்காக திருத்தப்பாடு செய்திருக்கிறார் என்றால் வயோதிகத்தின் காரணமாக திருத்தப்பாடு என்று ஒரு முறை மட்டும் தெரியும். எனது தாயார் இந்த நீதிமன்றத்தில் முதல் விசாரணை பிரமாணபத்திரம் தாக்கல் செய்தபோது அவராகத்தான் வந்தார் , யாரும் உடன் அழைத்து வந்து முதல் விசாரணை தாக்கல் செய்யவில்லை . நான் எனது தாயார் உடல்நிலை சரியில்லை என்று சொல்வதற்கு உரிய மருத்துவரிடம் இருந்து மருத்துவ சான்று ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி பழனியப்பன் என்பரின் தந்தையும் வாதியும் சங்ககிரியில் இருந்து ஊத்தங்கரையில் குடியேரியவர்கள் . அதேபோல் என் தாத்தா முத்து என்கிற செல்லப்ப கவுண்டரும் சங்ககிரியில் இருந்து ஊத்தங்கரையில் குடியேயவர்கள். முதலில் முத்து என்கிற செல்லப்ப கவுண்டர் குடிபெயர்ந்தாரா இல்லை

பிரதிவாதி தந்தை குடிபெயர்ந்தாரா என்றால் தெரியாது . முதல் பிரதிவாதி தந்தை கந்தசாமி கவுண்டர் குடும்பத்தோடு வந்து எனது தாத்தா நிலத்தில் குடியிருந்து வந்தார்களா் என்றால் இல்லை பக்கத்து நிலத்தில் குடிந்து வந்ததாக பட்டேன் . புறம்போக்கு நிலத்தில் குடிசை போட்டு குடியிருந்து வந்ததாக கேள்விபட்டேன் . அவ்வாறு குடியிருந்து வருவது சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும். எனது பெற்றோர்க்கு திருமணம் இருவீட்டு பெரியோர்களின் சம்மதத்தின் திருமணம் நடைபெற்றதா இல்லை இருவரும் விரும்பி திருமணம் செய்து கொண்டார்களா என்றால் நான் கேள்விபட்டவரை பெற்றோர்கள் திருவண்ணாமலையில் திருமணம் நடைபெற்றது என்ற தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாக்ல் செய்துள்ள விவரங்கள் தெரியும். எனது பெற்றோர் விரும்பி திருமணம் செய்து கொண்டதால் ரூ.5000/- திருப்பி தரமுடியாது என்றும் இங்கு குடியிருக்க கூடாது என்ற திருப்பி அனுவிட்டதாக கூறியது உண்மை என்றால் இல்லை . 02.02.1962 ல் பிரதிவாதி ஆவங்கள் காண்பிக்கப்பட்டு , இது எனது தாயார் எழுதிகொடுத்த தாவா பாத்திய விடுதலை பத்திரமா் என்றால் தெரியாது . எந்தெந்த ஊருக்கு சென் பழனியப்பன் நிலம் ஓட்டினார் என்று எத்தனை வருடம் யாருடை நிலத்தில் என்றால் எனக்கு தெரியாது. 1970 க்கு மேல் போன விவரங்கள் எனக்கு தெரியும் . செங்கம் வட்டம் அரசங்கன்னி கிராமத்திற்கு சென்று நிலம் ஓட்டியது தெரியும் , ஆனால் யார் நிலத்தை எவ்வளவு காலம் ஓட்டினார் என்று தெரியாது . பழயப்பன் இறந்து விட்டார் , பழனியப்பனின் மனைவி பெயர் தவமணி அவருக்கு 2 மகள்கள் 2 மகன்கள் உள்ளனர். 2 மகன்களின் பெயர்கள் என்ன வென்றால் தெரியாது . ஒரு மகள் பெயர் யாமினி மற்றொரு மகள் பெயர் தெரியாது . அவரது மகள்களுக்கு திருமணமாகி இருந்துள்ளதா என்றும் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்றும் தெரியாது . சுமார் 2006 க்கு பிறகு அவர்களுடன் தொடர்பில் இல்லை . பழனியப்பனின் இறுதி சடங்கிற்கு சென்றேன் . எனது தாயாருக்கும் பிரதிவாதி பிள்ளைகளுக்கும் இடையே பேச்சு வழக்கு உள்ளதா என்றால் இருந்துவந்தது . அப்படி எதுவும் இல்லையென்றும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 06.02.2018 ல் இந்த நீதிமன்றத்தில் இறந்த 1ம் பிரதிவாதியின் வாரிசு விவரங்கள் கேட்டு மெமோ தாக்கல் செய்துள்ளார்களா என்றால் சரிதான் . ஆனால் பேச்சுவார்த்தை இருந்திருக்கலாம் என்றுதான் நான் கூறுகிறேன். இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 6ம் பிரதிவாதி உடன் பேசி பழயிருக்கிறேனா என்றால் சிறுவயதில் பேசியுள்ளேன் . சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தை இல்லை. வெங்கடாதம்பட்டி கிராமத்தில் சீனிவாசன் என்பவரது நிலத்தை ஓட்டினாரா என்றால் தெரியாது . சீனிவாசன் என்பவது நிலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும்போது பி அட்டவணையில் உள்ள சொத்தில் கூரை வீடு கட்டி இருந்து வந்தாரா என்றால் இல்லை . தாத்தாவும் பாட்டியும் சேர்ந்துதான் கூரை வீடு கட்டி வசித்து வந்தார்கள். யார் நிலத்தை வாங்கி அங்கு இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த நிலம் புறம்போக்கு நிலமாக இருந்து 2013 ல் தாத்தா மற்றும் பாட்டி பெயரில் பட்டா வழக்கப்பட்டது. எனது தாத்தா எந்த வருடம் இறந்தார் என்றால் 2001 ல் கடைசி இருக்கலாம். எனது பாட்டி எந்த வருடம் இறந்தார் என்றால் 2012 ல் கடைசி

இருக்கலாம். இரண்டாம் இனசொத்து பொறுத்து எதிர் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள விவரம் சரியல்ல. எதிர் வழக்குரையின் 5 வது ஆவணம் 02.02.2000 தேதியிட்ட உயில் பத்திரம் காண்பிக்கப்பட்டு எனது தாத்தா கந்தசாதி கையெழுத்துதானா என்றால் தெரியாது. உயில் பத்திரத்தில் சாட்சி கையெழுத்து இட்டுள்ள நபர்களை தெரியாது. மல்லம்பட்டியில்(இலுப்பகுட்டப்பட்டி) உள்ள நிலத்தின் விஸ்திரம் ஏக்கர் 1.58. முதல் வழக்கு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. பழனியப்பன் இந்த நிலத்தை எப்பொழுது யாரிடம் இருந்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. குறிப்பாக விஸ்தீரம் ஏக்கர் 1.55. நிலம் கிரையம் வாங்கியது யாரிடம் எவ்வளவு தொகை கொடுத்து பழனிப்பன் வாங்கனார் என்றால் தெரியாது . இந்த நிலத்திற்கு தெற்கிலும் புறம்போக்கு நிலத்தை ஓட்டிவந்தார் . புறம்போக்கு நிலங்களை, இந்த நிலத்தை வாங்கவதற்கு முன்னர் ஓட்டிவந்தாரா பிறகு ஓட்டிவந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா பெயரில் இருந்து முதல் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாற்றி கொண்டதாக சொல்லப்படும் விவரம் எனக்கு தெரியாது . இது பழனியப்பன் என்பவர் புறம்போக்கு நிலத்தை ஓட்டி அது டிகார்டு பட்டா மூலம் வழங்கப்பட்டது என்றால் தெரியாது. 1ம் இன சொத்திற்கும் எனது தாயாருக்கும் , கந்தசாமிக்கும் பழனியம்மாளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றும் இது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல . இதேபோல் 2ம் இன சொத்து ஓட்டியது பழனியப்பன்தான் என்றும் உயில் பத்திரம் எழுதியதால் வாதிக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல . கிழக்கிலும் தெற்கிலும் எவ்வளவு விஸ்திரம் கொண்ட நிலங்களை ஓட்டினார் என்றால் எனக்கு தெரியாது . 1ம் இன சொத்தில் கிணறு மற்றும் மின்மோட்டார்(5 எச்பி) உள்ளது மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. நான் 2013 ல் பார்த்தபோது அது கூரை வீடாக இருந்தது அதற்கு பிறகு நான் பார்த்ததில்லை . 1962 ல் எனது தாயாரும் தந்தையும் விரும்பி சென்று திருமணம் செய்து கொண்டதால் பிரச்சினை ஏ்ற்பட்டு செல்லப்ப கவுண்டர் கந்தசாமி கவுண்டரை குடியிருக்ககூடாது என்று துரத்திவட்டார் என்றும் அவ்வாறு கந்தசாமி குடும்பத்தார் செல்லப்ப கவுண்டரின் வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்து வந்தார் என்றும் கந்தசாமி கொடுத்துவைத்துள்ள ரூ .5000/ தை தரமறுத்து பிரச்சனை எற்பட்டது என்றும் அந்த பிரச்சனைக்காக பஞ்சாயத்து பேசியபிறகுதான் எந்த சொத்தும் இல்லை என்றும் பிற்காலத்தில் எனது தந்தையோ சகோதரர்களோ சம்பாதிக்கும் சொத்துக்களோ எந்த பாக உரிமையும் கோருவதில்லை என பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல . இந்த வழக்கிற்காக வழக்கு சொத்துக்களில் உரிமை உள்ளது என்று பொய்சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல. என் தாய் தந்தை திருமண்த்திற்கு முன்பே குடும்பத்தில் பிரிச்சனை இருந்ததா என்றால் தெரியாது. என் தாயார் நல்ல உடல்நிலையில் உள்ளார் என்றம் அவர் ஏரிவேலைக்கு சென்று வருகிறார் என்றும் அவர் உடல் நிலை சரியல்ல என்று பொய்யாக தெரிவித்து நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down mein open Court interpreted/ read over to the witness and a acknowledge by him/her to be correct.

sd/-(Thiru.G. Amar Anand)
Distirct Munsif,
Uthangarai.